International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தியும் வேளிர்களும்

**கோ. லோகநாதன்**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி

**முனைவர் இரா. குணசீலன்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோவை

**ஆய்வுச்சுருக்கம்**

வேட்டைச் சமூகமாக வாழ்ந்த மக்கள் தங்களுக்குத் தேவையானவற்றைத் தாங்களே உற்பத்திசெய்து நிலைகுடிகளாக வாழ்ந்தனர். வேட்டைச் சமூகத்திலிருந்து வேளாண் குடிகளாகச் சமூகத்தில் தங்களைத் தகவமைத்து நிலைநிறுத்திக் கொண்டனர். உற்பத்தி அடிப்படை அலகுகளான நிலம், நீர், கால்நடைகளைத் தனதாக்கிக் கொண்டனர். இதன் மீதான பற்றுதான் வரலாற்றில் நீண்ட நெடிய சுவடுகளைக் காட்சிப்படுத்துகிறது. கூட்டங்கூட்டமாக வாழ்ந்த மக்கள் தங்களுக்கென தனித்த அடையாளத்தை உருவாக்கிக் குழுக்களாகப் பிரிந்தனர். அவை நாளடைவில் வாழ்வியல், இயற்கைச் சூழலின் அடிப்படையில் இனக்குழுக்களாக மாற்றமடைந்தன. இனக்குழுச் சமூகம் பேரரசாக உருமாறியது. காலப்போக்கில் இனக்குழுச் சமூகமே வேளிர்களாக மாறின. மூவேந்தர்களின் எழுச்சிக்கு முன்பாக இருந்த வேளிர் இனக்குழுக்களின் தோற்ற வரலாறு, தமிழர்களின் வரலாற்றில் உற்று நோக்கத்தக்கது. சங்க இலக்கியம், தொல்லியல் சான்றுகளில் வேளிர் தொடர்பான செய்திகள் நெடுகப் பரவலாகக் காணக் கிடைக்கின்றன. கொங்கு வட்டாரப் பகுதியில் கிடைக்கப்பெறும் மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்திப் பட்டயமும் அதில் குறிப்பிடப்பெறும் ஐந்து வேளிர்கள் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**வேள் - வேளிர்**

மானிட இனத்தின் அடிப்படை அலகாக விளங்கக்கூடியது மொழி. மொழியில்தான் அம்மக்களின் வாழ்வியல், வரலாற்றுக் கூறுகள் பதிவுபடுகின்றன. தமிழ் மானிட இன வரலாற்றில் பேரரசர்களின் எழுச்சிக்கு முந்தையவர்களாக வேளிர்கள் காணப்பெறுகின்றனர். பொ.ஆ.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய பிங்கல நிகண்டு, 'வேள்' என்னும் சொல்லைக் 'குறுநில மன்னர்' மற்றும் சாளுவர் என்கிற பொருண்மையில் குறிப்பிடுகின்றது. வேள் என்பதன் வேர்ச்சொல்லில் இருந்தே 'வேளிர்' சொல் பிறந்ததாகவும், வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டவர்களே வேளிர் என்றும், வேள், 'வெளிச்சம்' என்ற சொல்லிலிருந்து உருவானதாகவும் ஆய்வாளர் அரங்கசாமி கூறுகிறார். அதோடு இச்சொல், 'வேளிரிடத்தேயுள்ள கடவுள் தன்மை அல்லது ஒளி போன்றவற்றைக் குறிப்பதாக இருக்கலாம்' என்றும் ஆய்வாளர் பூங்குன்றன் கூறுகிறார். 'வேள்' என்னும் இச்சொல் 'மற்றவர்களைக் காட்டிலும் ஒளிபொருந்திய தலைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவன்' என்ற பொருண்மையில் வழங்குவது என்றும் கொள்ளலாம். கேள்→கேளிர் என்பதைப் போன்று வேள்→வேளிர் என உருவானதை ஆய்வாளர்கள் காட்டுகின்றதும் கொள்ளத்தக்கது.

**மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தி - பட்டயம்**

'மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தி' என்னும் இப்பட்டயமானது புலவர் வே.ரா. தெய்வசிகாமணி என்பாரிடம் ஓலைச்சுவடியாகவும் துடியலூர் டி.எம் காளியப்பா என்பாரிடம் காகிதப்படியாகவும் கிடைத்திருக்கின்றதையும், கலிவெண்பாவில் இயற்றப்பட்டுக் கலியோசை, செப்பலோசையுடன்

அமைந்திருப்பதையும் புலவர் செ.ராசு குறிப்பிடுகின்றார்.

வேளிர்களின் குடியேற்றம் குறித்து இப்பட்டயம் விளக்குகின்றது. உதியன் மரபினைச் சேர்ந்த மாந்தரஞ்சேரல் கொங்கு நாட்டை ஆளுகை செய்தவர். மாவலியர், காவலியர், பூவலியர், வேடர், வேட்டுவர் ஆகியோர் பாண்டியர்களின் துணையால் வஞ்சி, கருவூர், கனகதாராபுரம், விளங்கில், மூலனூர் ஆகிய பகுதிகளில் அமைச்சர்களாகச் சேரனின்கீழ் ஆட்சி புரிந்தவர்கள்.

**'பாண்டியர்தம் புத்திரராய் பகர்கொங்கர் ஐவரோடும்'** என்று மெய்க்கீர்த்தியில் வேட்டுவர்கள் பாண்டியர்களின் மகன்களாகக் (புத்திரர்) குறிப்பிடப்பட்டுள்ளது. மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப்படும் பெயர்களாக,

- ♦ மாந்தரஞ்சேரல்
- ♦ எழினி
- ♦ கோவன்
- ♦ திதியன்
- ♦ மையூரன்
- ♦ பொருநன்

என்பனவற்றுள் இவ்வைந்து வேட்டுவர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**நிலந்தருமிப் பெருங்கீர்த்தி நிலமை பெறு பாண்டியனின்**

**குலம்பெருக வந்துதித்த கோவேந்தர் ஐம்பிரிவர்**

**பூவலியர் மாவலியர் பொற்புமிகு காவலியர்**

**சேவகமே மிக வேடர் செம்மை மிகு வேட்டுவர்கள்** (மெய்.)

வேட்டுவர்களின் தலைவன் 'கொத்துமுடிப் பாண்டியன்' ஆவான். வேளிர்களுடன் மண உறவு வைத்துக் கொண்ட சேரன் அவர்களுக்கு

- ♦ தருவளவர்
- ♦ காவதி
- ♦ கிள்ளி
- ♦ நள்ளி
- ♦ ஏனாதி

ஆகிய பட்டங்களைக் கொடுத்துச் சிறப்புச் செய்கின்றான்.

இதனால் கோபம் கொண்ட வேட்டுவர்கள் தங்களுக்குத் தலைவனாக விளங்கும் கொத்து முடிப் பாண்டியனிடம் சென்று முறையிடுகின்றனர். கோபம் கொண்ட கொத்துமுடிப் பாண்டியன் தூதனைச் சேரனிடம் அனுப்பி வைக்கின்றான். பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் இருதரப்பினரும் போருக்குத் தயாராகின்றனர். பாண்டியன் ஆதரவுடன் வேட்டுவர்களும், சேரனின் ஆதரவுடன் தூரர் தலைமையில் வேளிர்களும் போரிடுகின்றனர்.

தூதுவரைப் போக்கிவரும் **தூரர்** எனும் மந்திரரை இறுதியில் வேளிர் இனத் தலைவர்கள் வெற்றி பெறுகின்றனர். வெற்றி பெற்றவர்கள் காணியூர்களைப் பெற்றுப் பலனடைகின்றனர். மனமகிழ்ந்த மாந்தரஞ்சேரல், சாத்தன் வழிபாட்டை 'நாட்டராயன்' பெயரில் உருவாக்கி 'மாந்தீஸ்வரர்' என்ற சிவன் கோயிலையும் உருவாக்குகின்றான்.

மெய்க்கீர்த்தியில் கொங்கர் என்ற பெயர் வேட்டுவர்களையே குறிப்பதாக அமைந்துள்ளது.

- ⇒ பாண்டியர் தம் புத்திரராய் பகர்**கொங்கர்** ஐவரொடும்
- ⇒ காவலியர் **கொங்கர்** எனும் கமழ்தாரர் இவனுடைய
- ⇒ கல் தோன்றி மண் தோன்றா காலம் முதலாக நாங்கள்

மல் வலயந் தோள் கொண்டு மாவலியர் இருந்து

காவலராய் **கொங்கர்களாய்** கமலரசுபுரி நாட்டில்

**கொங்கர்** பெயர் கொண்டும் குலவும் நம் வேட்டுவரை (மெய்.)

இம்மெய்க்கீர்த்திப் பாடலில் இவ்வாறாக நான்கு இடங்களில் மேற்கண்டவாறு 'கொங்கர்' என்னும் சொல் வேட்டுவரைக் குறிப்பதாய் அமைந்துள்ளது. இதில் குறிக்கப்பெறும் வேளிர்கள் அனைவரும் வடக்கிருந்து வந்தவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வடக்குகிருந்து வந்தவரை மதித்தவரை மந்திரியாய்**

**தடக்கிரிசூல் உலகமதில் தணிக்காணி தந்தளித்தல்**

**எங்கள் குலத்தவர் தமக்கு இழிவாகும் ஆதலினால்** (மெய்.)

இம்மெய்க்கீர்த்தியின்வழி வேளிர்கள் வடக்கில் இருந்து வந்தவர்கள் என்பது தெளிவாகிறது. இதில் குறிக்கப்பெறும் ஐந்து வேளிர்களின் பெயர்கள் 'தலையாலங்கானம்' என்னும் இடத்தில் பாண்டியரை எதிர்த்த ஐந்து வேளிர்களின் பெயரோடு ஒத்துப்போகிறது.

**ஐந்து வேளிர்கள்**

எழினி, கோவன், திதியன், மயூரன், பொருநன் என்னும் இவ்வைந்து வேளிர்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப் படுகின்றன. அகநானூற்றின் 36ஆம் பாடலில் காணலாகும், பாண்டியனை எதிர்த்த வேளிர் கூட்டமைப்பின் பெயர்களும் இவ்வேளிர் (மெய்க்கீர்த்தியில்) கூட்டத்தாரின் பெயர்களும் ஒத்துப் போகின்றன. இவ்வைவரும் சோழர்களின் சார்புடையவராகக் கருதப்படுகின்றனர். அயோத்திப்பட்டினம், வேங்கடம், துவரை, மையூர், செய்யூர் இவையெல்லாம் வேளிர்கள் ஆட்சி செய்த பகுதிகள் என மெய்க்கீர்த்தியில் குறிக்கப் படுகின்றது.

**திங்களையும் மெய்க்கீர்த்தி திகழ்சோழர்**

**தம்குடியில்**

**மைக்கருமை மையூரும் மருவுதிரு அய்யோத்திப்**

**பட்டினமும் வேங்கடமும் பாங்கமரும் துவரையதும்**

**சக்கரமோட் டியஅரசு தான்புரியும் சக்கரவர்**

**சக்கரவர்த் திகள்எனவே தாரரசு புரிநிலைமை**

**மையூரும் பிறதலமும் மாதவநீ ராடிவரும்**

**செய்யூரும் மாதவத்தர் செப்புநலங் கேட்டஇவன்**

(மெய்.)

**சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்**

**போர்வல் யானைப் பொலம்பூ ணெழினி**

**நாரரி நறவி னெருமை யூரன்**

**றேங்கம் ழுகலத்துப் புலர்ந்த சாந்தி**

**னிருங்கோ வேண்மானிய றேர்ப் பொருநனென்**

(அகம்.36)

'எழுவரின் நல்ல வலிமை ஒழியும்படிப் பாண்டியன் போரை நடத்தினான்' என அகநானூறு குறிப்பிடுகின்றது. ஆயினும், ஆலங்கானம் குறித்தும் பாண்டிய மன்னனின் பெயர் குறித்தும் மெய்க்கீர்த்தியில் எவ்விதக் குறிப்புகளும் இடம்பெறவில்லை.

**அங்கவரில் வாழ்வுபெறும் அழகியசீர்த் துவரையில்வாழ்**

**செம்பியனைப் பொன்னணியும் திகழ்சோழ எழினியையும்**

**வம்பியல்செந் தார்அணியும் மாண்பன்இருங் கோவலையும்**

**திதியனெரு மையூரன்**

**திகழ்பொருநன் என்றவரை** (மெய்.)

சேரன்மீது கோபம் கொண்ட வேட்டுவர்கள் தென்னகத்தில் பாண்டியனிடம் சென்று முறையிடுகின்றனர். இதில்,

**கொங்கன் என நமது பெயர் கொடுத்ததாகவும்**

(மெய்.)

தம் பெயரை வேளிர்களுக்குக் கொடுத்ததையும் சொல்லி முறையிடுகின்றனர். ஆகக் 'கொங்கன் என்ற பெயர் வேட்டுவர்களுக்கு உரியதாக' இருந்ததை இப்பட்டயத்தின் வாயிலாக உறுதி செய்ய முடிகிறது. இவ்விரு பாடல்களிலும் 'மையூரன்' என்னும் வேளிரின் பெயர் இடம்பெறுகிறது.

பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தில் 'மையூர் கிழான்' என்ற வேளிர்குலத் தலைவன் குறிக்கப்பெறுகிறான். சேரன் குட்டுவன் இரும்பொறைக்குத் தன் மகனான வேண்மாள் அந்துவன் செள்ளையைத் திருமணம் செய்து கொடுத்துள்ளான்.

**குட்டுவன் இரும்பொறைக்கு மையூர் கிழான்**

**வேண்மாள் அந்துவஞ்செள்ளை ஈன்ற மகள்**

(பதி.ஒ.ப.)

இரண்டாம் பத்தில் உதியஞ்சேரலின் மனைவியாகவும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தாயாகவும் வேண்மாள் குறிக்கப்படுகின்றாள். வேண்மாளானவள் வெளியத்து வேளிர் என்னும் குடியில் பிறந்தவளாகப் புலியூர் கேசிகன் குறிப்பிடுகின்றார்.

**மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி**

**இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு**

**வெளியன் வேண்மாள் நல்லினி யீன்றமகள்**

(பதி.இ.ப.)

மதுரையின் அரிட்டாப்பட்டியில் கிடைக்கப்பெற்ற தமிழ்ப் பிராமி கல்வெட்டில் காணப்படும் 'வொளியன்' என்ற சொல் இதனோடு ஒத்துப் போகின்றது. மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப்படும் வேளிர்கள் சேரருடன் மணஉறவு கொண்டு உள்ளனர். அந்த ஐந்து வேளிர்களுள் மையூரன் என்ற வேளிர் இனத்தவர், சேரர்களுடன் மண உறவு வைத்துள்ளமையைப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்து, ஒன்பதாம் பத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

**உவரா வீகைத் துவரை யாண்டு**

**நாற்பத்தொன்பது வழிமுறை வந்த**

**வேளிருள் வேள்** (புறம். 201)

புறநானூற்றின் கபிலர் பாடலில் இளங்கோவேள் பற்றிய குறிப்புக் காணக்கிடைக்கின்றது. துவாரகையை ஆண்டுவந்த, நாற்பத்தொன்பது தலைமுறை வழியாக வந்த வேளிர்களில் சிறந்த வேளிராய்க் காணப்பெறுபவன் எனக் குறிக்கப் படுகின்றது. மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தியிலும் துவாரகையை ஆண்ட வேளிர்கள் எனக் குறிக்கப்பெறுகின்றது. புறநானூற்றில் இளங்கோ வேள் பற்றி இரண்டு பாடல்களும், எழினியைப் பற்றி இரண்டு பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

இளங்கோவேள் பற்றிய தரவுகளைக் கல்வெட்டு களில் ஆராய்கையில் இராமநாதபுரத்தின் திருக்கலக்குடியில் கிடைத்த பிற்காலக் கல்வெட்டொன்றில் 'துவாரபதி வேலன்' என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது. 'கொடும்பாளூர் இருக்குவேளிரும் இருங்கோவேளும் ஒன்றே' என்றும், 'பதினெண் வேளிர்கள் அனைவரும் கங்கைச் சமவெளியிலிருந்து வந்தார்கள்' என்றும் ஆய்வாளர் ம ஆரோக்கிய சாமி கூறுகிறார். ஆனால் 'சங்க காலத்தில் இருந்த இருங்கோவேள் அரசருக்கும் பிற்காலத்தில் இருந்த இருக்குவேள் அரசருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. அவர்கள் வேறு, இவர்கள் வேறு. பெயர்களில் காணப்படுகிற ஒற்றுமை பற்றி இருவரையும் ஒருவராக ஊகிப்பது கூடாது' என இக்கருத்தை மறுக்கும்போக்கும் உள்ளது.

வடக்குத் தேயத்திலுள்ள முனிவன் ஒருவனின் உதவிகொண்டு இருங்கோவேள் மரபினர் தென்னாடு வந்ததாகக் கபிலரின் புறப்பாடல் (201) கூறுகிறது. கங்கைச் சமவெளியில்

பனாரஸ் பகுதியில் கரம்பை என்ற ஊர் அகத்தியர் பிறந்த ஊராக கருதப்படுகிறது என்றும் அதன் காரணம் பற்றியே, கரம்பலூர் கொடும்பாளூர் என்ற பெயர்க் காரணம் கூறப்படுகின்றது.

ஹொய்சாளர்கள், கங்கர்கள், சாளுக்கியர்கள் அனைவரும் வேளிர் இனத்தவரே ஆவர். பிங்கல நிகண்டில் சாளுக்கிய வேந்தர்கள் வேள்புலவரசர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சூடாமணி நிகண்டில் வேளிர் என்ற சொல்லிற்குக் குறுநில மன்னர் என்ற பொருண்மை கூறப்பட்டுள்ளது. நச்சினார்க் கினியர் வேளிர் என்ற சொல்லுக்குக் குறுநில மன்னர் என்ற விளக்கத்தையே கையாண்டு உள்ளார். சாளுக்கியரும் வேளிரும் ஒருவரே என வேளிர் வரலாற்று நூல் குறிப்பிடுகின்றது.

வேளிர்களின் புலப்பெயர்வு கங்கைச் சமவெளியி லிருந்து தொடங்கியதாக ம.ஆரோக்கியசாமி கூறுகிறார். ஆனால் சிந்துவெளி ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் ‘சிந்து சமவெளி வேளிர்களின் நகரம் என்றும் சிந்துவெளி அழிவிற்குப் பின் வேளிர்கள் தெற்கு நோக்கிக் குடிபெயர்ந்தனர்’ என்றும் உரைக்கின்றார். சற்றே இது ஒன்றினாலும் வேளிர்களின் தொடக்கம் தொடர்பான கருத்து இருவருக்கும் இடையே முரணாகவே உள்ளது.

**முடிவுரை**

மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் புறநானூறு 201, அகநானூறு 36, மாந்தரஞ்சேரல் மெய்க் கீர்த்தி ஆகிய இம்மூன்றின்வழியாக வேளிர்கள் வட திசையில் இருந்து பொ.ஆ.மு. எட்டாம் நூற்றாண்டு காலப்போக்கில் தமிழகத்திற்கு வந்துள்ளனர் ம.ஆரோக்கியசாமி, மு.இராகவை யங்கார் கருத்துகள், தரவுகளால் நிறுவமுடிகிறது. ஆனால் அதேசமயத்தில், வடக்குத் தேயத்தவர்கள் எனின் ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அவ்வேளிர்கள் பேசிய மொழி எது? என்ற வினா இக்கட்டுரைவழி எழுகின்றது.

**துணை நூற்பட்டியல்**


1. ர.பூங்குன்றன்(2021), வேளிர் வரலாறு, சென்னை; தடாகம்
2. ர.பூங்குன்றன்(2022), தொல்குடி வேளிர் வேந்தர், சென்னை; என்சிபிஎச்
3. துரை ஜெகநாதன் 1982 ஆரிய திராவிடரும் அழிந்து போன சங்கங்களும், சேலம்; வள்ளி பதிப்பகம்
4. புலவர் செ ராசு 2007 கொங்கு வேளாளர் செப்பேடுகள், ஈரோடு;கொங்கு ஆய்வு மையம்
5. மு.ராகவையங்கார் 1913 வேளிர் வரலாறு, மதுரை; மதுரை தமிழ்ச் சங்கம்
6. M.Arokiaswami (1954) The Early History of Velir basin, Madras; Amuthanilayam
7. KN shivaraja pillai (1985) Agastya entha Tamil land New Delhi; Asian Education-al services
8. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை (1955) திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி சென்னை


**சான்றென் விளக்கம்**

1. பிங்கல நிகண்டு,1917 ப.எண்.125,552
2. வேளிர் வரலாறு ர.பூங்குன்றன் 2021 ப.எண்18
3. வேளிர் வரலாறு ர.பூங்குன்றன் 2021 ப.எண் 18
4. வேளிர் வரலாறு மு.இராகவையங்கார் 1913 ப.எண் 01
5. ஆவணம் இதழ்- 4, 1994, ப. 90
6. பதிற்றுப் பத்து புலியூர் கேசிகன் உரை 2005 ப.எண் 19
7. The Early History of Velir basin, Madras M. Arokiaswami (1954) ப.எண்.50
8. களப்பிரர் ஆட்சியில் தமிழகம் ,மயிலை சீனி.வேங்கடசாமி 2024 ப.எண் 64
9. The very capital of the irukkuvel Dynasty in the south is called kodumballur, which appears as nothing but a variant of karambalur re-calling to one's mind Karambai(near banaras, on the banks of the Ganges. The native habi-tat of Agasthiya) M.arokkiyasami,The orgin of vels p.no.27
10. பிங்கல நிகண்டு1917, ப.எண்125
11. சூடாமணி நிகண்டு1999 செய்யுள் எண் 122 ப.எண்.292
12. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை நூற்பா எண் 32 ப.எண்.85
13. வேளிர் வரலாறு மு.இராகவையங்கார் 1913. ப.எண் 74
14. The Early History of Velir basin, Madras M. Arokiaswami (1954) ப.எண் 40-41